**தலைப்பு - 269- மட்டக்களப்பு மாவட்ட செயலகம்/ கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 மற்றும் 2 ஆம் பந்திகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகம்/ கச்சேரி கணக்குகள் தொடர்பான பொதுவான தகவல்களை கொண்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி தொடக்கம் பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கோறளைப்பற்று வடக்கு
(ஆ) கோறளைப்பற்று மேற்கு
(இ) கோறளைப்பற்று மத்தி
(ஈ) கோறளைப்பற்று
(உ) கோறளைப்பற்று தெற்கு
(ஊ) ஏறாவூர்ப்பற்று
(எ) ஏறாவூர் நகர்
(ஏ) மண்முனை வடக்கு
(ஐ) காத்தான்குடி
(ஒ) மண்முனைப்பற்று
(ஓ) மண்முனை தென் எருவில்பற்று
(ஔ) போரதீவுப்பற்று
(க) மண்முனை தென்மேற்கு
(கா) மண்முனை மேற்கு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய மூலவளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, முற்பணக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மாவட்ட செயலகத்திற்காக செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகள் ரூபா 674,910,000 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 673,787,966 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி மாவட்டச் செயலகத்தின் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1,122,034 சேமிப்பானதுடன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 0.17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

**2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 443,334,774 | 442,239,972 | 1,094,802 | 3 |
| மூலதனம் | 231,575,226 | 231,547,994 | 27,232 | 4.5 |
| மொத்தம் | 674,910,000 | 673,787,966 | 1,122,034 | |

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 24 அமைச்சுக்கள் மற்றும் 20 திணைக்களங்கள் என்பவற்றிடமிருந்து மாவட்டச் செயலகத்தால் முறையே ரூபா 2,798,201,744 மற்றும் ரூபா 2,290,801,197 உள்ளடங்கலான ரூபா 5,089,002,941 தொகையான மொத்த நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்தன. அவற்றில் முறையே ரூபா 2,737,335,334 மற்றும் ரூபா 1,867,173,959 உள்ளடங்கலான ரூபா 4,604,509,293 தொகையான நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, முறையே ரூபா 60,866,410 மற்றும் ரூபா 423,627,238 அல்லது 2 சதவீதம் மற்றும் 18 சதவீதம் உள்ளடங்கலான ரூபா 484,493,648 தொகையான நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2. முற்பணக் கணக்கு

**அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

மாவட்ட செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26901 | 35,000,000 | 32,255,950 | 18,000,000 | 21,680,691 | 100,000,000 | 91,132,735 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 123,576,581 ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் 1.1 ஆம் பந்திகளில் காணப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புகளிற்கு உட்படுத்தப்பட்டவை திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது. முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் அவற்றின் 3 ஆம் பந்தியில் காணப்படுகின்றன.

## 3. தலைப்பு 269 மட்டக்களப்பு மாவட்ட செயலகம்/கச்சேரி

### 3.1 பாதீட்டு முரண்

02 செலவின விடயங்களிற்காக மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தகையவாறு நிதியேற்பாட்டினது பயன்பாட்டின் பின்னரான சேமிப்புகள் உரிய செலவின விடயங்கள் தொடர்பான தேறிய நிதியேற்பாட்டின் 05 சதவீதத்திற்கும் 07 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலிருந்தது.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 9,697,969 தொகை குறித்த செயற்பாடுகளிற்கு பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 03 ஆண்டுகளாக இருந்த ரூபா 565,263 தொகையான வைப்புக்கள் தொடர்பில் 2014 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திறைசேரி புத்தகத்தின்படி காட்டப்பட்ட மீதிக்கும் மாவட்ட செயலகத்தின் கணக்குப் புத்தகங்களில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் வைப்புக்கணக்கில் ரூபா 563,837 ஆன வித்தியாசங்கள் காணப்பட்ட போதிலும் 1983 ஆம் ஆண்டிலிருந்து இந்த வித்தியாசத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்களின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

(i) எட்டு மோட்டார் வாகனங்கள் மற்றும் எட்டு இயந்திரங்கள் 1 தொடக்கம் 5 வருடங்கள் வரையான வீச்சிலான காலப்பகுதியில் பயன்படுத்தப்படாது இருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டன.

(ii) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2006 மார்ச் 21 ஆந் திகதிய எச்ஏ/டிஏ/12/27 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், சகல பிரதேச செயலாளர்களும் அவர்களிற்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதியில் கட்டாயம் வசிக்க வேண்டும். எவ்வாறாயினும் பிரதேச செயலாளர்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட 14 அரச விடுதிகளில், 11 விடுதிகள் உரிய பிரதேச செயலாளர்களால் பயன்படுத்தப்படாது பயனற்றிருந்தது.

(iii) இலங்கை தகவல் மற்றும் தொடர்பால் தொழில்நுட்ப முகவராண்மையால் இலங்கை அரசாங்க வலையமைப்பினை (எல்ஜீஎன்) தாபிப்பிற்காக 2013 ஆம் ஆண்டின் போது கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்திற்கு இரண்டு தொகுதி உபகரணம் (எல்ஜீஎன்) வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த உபகரணங்கள் அத்தகைய வலையமைப்பு தாபிக்கப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக பயனற்று இருந்தது.

(iv) மாவட்ட செயலகமானது 2014 ஆம் ஆண்டின் போது பௌதீக வசதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காகவும் நாள் பராமரிப்பு நிலையத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 9,040,462 தொகையினை செலவழித்திருந்தது. எனினும் இந்தக் கட்டிடமானது 2015 யூலை வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 இணக்கமின்மை**

(அ) **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | ரூபா | |
| (i) நிதிப் பிரமாணம் 187 | 265,349 | போரதீவுப்பற்று மாவட்டச் செயலகத்தால் பெறப்பட்ட காசு வங்கியில் நாளாந்தம் வைப்புச் செய்யப்பட்டிருக்காததுடன் சேகரிப்பு திகதிக்கும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட திகதிக்கும் இடையில் 02 நாட்கள் தொடக்கம் 06 நாட்கள் வரையிலான வீச்சிலான அத்தகைய காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ii) நிதிப் பிரமாணம் 373 | 2,919,800 | திசெம்பர் 31 இலிலுள்ள கட்டுநிதியின் கையிலுள்ள மீதி அத் திகதியில் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். எனினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,919,800 தொகையான கட்டுநிதியக் கணக்கின் மீதி 2015 மார்ச் 06 இலேயே திறைசேரிக்கு திருப்பப்பட்டிருந்தது. |

## 3.5 உள்நாட்டு நிதியளித்தலின் கீழான செயற்திட்டங்களை அமுலாக்கல்

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்ட தொடங்கப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள், பூர்த்தியாக்கப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் போன்ற சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) தொடங்கப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

மண்முனை தெற்கு மேற்கு பிரதேச செயலகம் மாகிவைதீவு தெற்கு இந்து ஆலய சங்கத்திலுள்ள வரவேற்பு நுழைவாயிலின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தமானது ரூபா 96,955 ஒப்பந்த பெறுமதியில் வழங்கப்பட்டது. எனினும், மேலே குறிப்பிடப்பட்ட வேலை உரிய அதிகாரசபைகளிடமிருந்து அனுமதி பெறாததால் 2015 யூலை 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(i) குமரன் கோவில் வீதி நிர்மாணம்

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள புன்னச்சோலையில் குமரன் கோவில் வீதிக்கு உருக்கிடல் மற்றும் தாரிடல் போன்றவற்றிற்கான ஒப்பந்தம் ரூபா 2,119,909 ஒப்பந்த பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- பல இடங்களில் வீதியின் மேற்பரப்பில் 0+146-155 மற்றும் 0+192-0+201 ஆன சிறிய குழிகள் காணப்பட்டன.
- பல இடங்களில் வீதியின் விளிம்புகளில் சேதங்கள் இருந்தன.
- குறைபாட்டு பொறுப்புக் காலம் 2014 யூலை 21 இல் முடிவடைந்திருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் 2014 திசெம்பர் 31 வரை திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வேலம்குடா வீதி நிர்மாணம்

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள பிள்ளையாரடியில் வேலம்குடா வீதிக்கான உருக்கிடல் மற்றும் தரரிடலிற்கான ஒப்பந்தம் ரூபா 5,468,099 ஒப்பந்த பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பல இடங்களில் வீதியின் மேற்பரப்பில் சிறிய குழிகள் காணப்பட்டன.

- பல இடங்களில் வீதியின் மேற்பரப்பில் 0+154-0+263, 0+273-0+338, 0+351-0+378, 0+389-0+390, 0+396-0+403, 0+414-0+417, 0+426-0+433, 0+441-0+451 மற்றும் 0+484-0+504 ஆன அடிப்படை தவறுகள் அவதானிக்கப்பட்டன.

- குறைபாட்டு பொறுப்புக் காலம் 2014 யூலை 21 இல் முடிவடைந்திருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் 2014 திசெம்பர் 31 வரை திருத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் கீழேதரப்பட்டுள்ளன.

**வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்கான காசு– 2014**

---

**வாஹரை விவசாய அபிவிருத்தி சபையின் பிரதேசத்திலுள்ள தோனிதாண்டமடு குளத்தினை புதுப்பித்தல்.**

---

செங்கலடி மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் அலுவலகம் 2011 இல் ரூபா 4,763,000 செலவழித்து வாஹரையிலுள்ள தோனிதாண்டமடு குளத்தினை புதுப்பித்திருந்தது. எனினும், கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தால் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்ட புதுப்பித்தல் வேலைகளை கருத்திற்கொள்ளாமல் அதேகுளம் 2014 இல் மீண்டும் ரூபா 9,869,469 செலவழித்து மீள புதுப்பிக்கப்பட்டிருந்தது. ஆகையால் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தால் மேல் குறிப்பிடப்பட்ட குளத்தை புதுப்பித்தலுக்காக செலவழிக்கப்பட்ட ரூபா 9,869,469 பயனற்ற செலவினமாகவிருந்தது.

**(ஆ) தந்தமலையிலுள்ள மீனாட்சியோடை குளத்தினை புதுப்பித்தல் - 2014**

---

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம் வேலை நிகழ்ச்சித்திட்டம் - 2014 ற்கான காசின் கீழ் புனரமைப்பதற்கு ஐந்து குளங்களை தெரிவு செய்திருந்தது. தந்தமலையிலுள்ள மீனாட்சியோடை குளம் என அழைக்கப்படும் ஒரு குளம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டிருந்தது. ஆகையால், பிரதேச செயலகம் ரூபா 110,850 ஐ செலவழித்த பின்னர் இடையில் மேலே குறிப்பிடப்பட்ட புனரமைப்பு வேலைகளை நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. எனினும், பிரதேச செயலகமானது மேலே குறிப்பிடப்பட்ட தகுதியற்ற கொடுப்பனவை சிபாரிசு செய்து அங்கீகரித்த அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.7 மேலதிகக் கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகமானது அச் செயலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட சான்றுபடுத்தலின் பிரகாரம் வாஹரை விவசாய அபிவிருத்தி சபை பிரதேசத்திலுள்ள தோணிதாண்டமடு குளத்தின் புதுப்பித்தலிற்காக 16,187$m^3$ மண்ணை நிரப்புவதற்கு ரூபா 7,543,281 தொகையை செலுத்தியிருந்தது. எனினும் மட்டக்களப்பு நீர்ப்பாசன பணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட கூற்றின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட குள அணைக்கட்டிற்கு 7,171$m^3$ மண் மாத்திரமே நிரப்பப்பட்டதாக கணக்காய்வில் நிருபிக்கப்பட்டது. இதன் விளைவால் மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 4,201,493 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 முகாமைத்துவக் குறைாடுகள்

### (அ) உரித்துறுதிகள் கையாளிப்பதிலுள்ள தாமதம்

காணி தகராறுகளை தீர்ப்பதற்காக பிரதேச செயலக மட்டங்களில் மாவட்ட செயலகத்தால் நடாத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் பிரகாரம், இது ஆறு பிரதேச செயலக பகுதிகளிலுள்ள 344 பயனாளிகளிற்கான சுவர்ணபூமி மற்றும் ஜயபூமி உரித்துறுதிகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அந்த உரித்துறுதிகள் 1997 முதல் 2014 வரையான காலத்தின் போது அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் உரிய பிரதேச செயலகங்களிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பயனாளிகளிற்கு அந்த உரித்துறுதிகளை கையளிப்பதற்கு 2015 யூன் 16 இல் கணக்காய்வு பரிசோதனை திகதிவரை உரிய பிரதேச செயலகங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பிரதேச செயலகங்களின் பெயர் | பயனாளிகளிற்கு வழங்கப்பட்டிருக்காத உரித்துறுதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| காத்தன்குடி | 29 |
| கோரளைப்பற்று மேற்கு | 12 |
| மண்முனை வடக்கு | 08 |
| மண்முனை தென்மேற்கு | 25 |
| மண்முனை மேற்கு | 38 |
| ஏறாவூர்ப்பற்று | 232 |
| மொத்தம் | 344 |

(ஆ) பழமை வாய்ந்த பொருட்களின் பற்றாக்குறை

பிரதேச செயலகத்தால் மீளாய்வாண்டின் போது புதுப்பிக்கப்பட்ட காத்தான்குடி நூதனசாலையில் வைப்பதற்காக ரூபா 581,100 பெறுமதியான ஐந்து பழமைவாய்ந்த பொருட்கள் பிரதேச செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2015 யூன் 12 இல் கணக்காய்வு பரீட்சிப்பு திகதிவரை அத்தகைய பொருட்களை நூதனசாலை பெற்றிருக்கவில்லை.

(இ) அரசவிடுதிகளில் குடியிருத்தல்

மட்டக்களப்பு கிறீன் தெருவிலுள்ள அரசவிடுதிகளில் 2010 இலிருந்து இரண்டு அங்கீகரிகாரமற்ற நபர்கள் குடியேறியிருந்தார்கள். எனினும், முகாமைத்துவமானது அத்தகைய அங்கீகாரமில்லாத நபர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றுவதற்கு 2014 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) தொலைத்தொடர்பு கோபுரங்களை நிறுவுதல்

04 பிரதேச செயலக காணிகளிற்குள் உரிய பிரதேச செயலகங்களின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் ஆறு தனியார் தொலைத்தொடர்பு கம்பனிகள் அவர்களுடைய தொலைத்தொடர்பு கோபுரங்களை நிறுவியிருந்தது. எனினும், அத்தகைய கம்பனிகளுக்கு எதிராக 2014 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 49 | 38 | 11 |
| மூன்றாம் மட்டம் | 34 | 06 | 28 |
| இரண்டாம் மட்டம் | 556 | 519 | 37 |
| ஆரம்ப மட்டம் | 137 | 126 | 11 |
| மொத்தம் | 776 | 689 | 87 |